கனகரத்தினம் பொது நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 11 முறை 11 இதழ் 229
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-9-1985

## பஞ்சாப் தேர்தல்: அகாலிதள் வெற்றி

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தின் சட்ட சபை, லோக்சபா தேர்தல் முடிவுகளில் அகாலிதள் கட்சி முன்னணியில் திகழ்கிறது.

115 சட்ட சபைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் இதுவரை வெளிவந்த 13 முடிவுகளில் அகாலித்தள் கட்சி 8 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. இந்திரா காங்கிரஸ் கட்சி 5 இடங்களை வென்றுள்ளது. சட்டசபை முடிவுகளில் தற்போது அகாலித்தள் 60 தொகுதிகளிலும் இந்திராகாங்கிரஸ் 20 தொகுதிகளிலும் முன்னணியில் உள்ளது. பாரதீய ஜனதா கட்சி 4 தொகுதிகளிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2 தொகுதிகளிலும், ஜனதா 2 தொகுதிகளிலும், சுயேட்சை 5 தொகுதிகளிலும் முன்னணியில் உள்ளனர்.

13 தொகுதிகளைக் கொண்ட லோக்சபா தேர்தலில் 6 தொகுதிகளில் அகாலிதள் கட்சியும், 4 தொகுதிகளில் இந்திரா காங்கிரசும் முன்னணியில் நிற்கின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

★ ஜனாதிபதி, லலித்துடன் 210 நிமிடநேரப் பேச்சுவார்த்தை

# விரைவில் தீர்வு: நம்பிக்கையுடன்

# 'ரொமேஷ்' நாடு திரும்பினார்!

## 'தொண்டா', நீலனுடனும் நீண்டநேர ஆலோசனை

(இ. பெஞ்சமின்)

"இலங்கை இனப் பிரச்னைக்கு நல்ல தீர்வு காணக்கூடிய சூழ்நிலை அதி விரைவில் ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. யுத்த நிறுத்தம்; வெறும் விதி - நடைமுறைகளின்றி நேர்மையுடன் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சிக்கல்கள் பல இருந்தாலும், இனப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வுகாண இலங்கை அரசினால் முடியும் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு" என்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி தெரிவித்துள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

## கடற்கரையில் மூன்று பெண்களின் சடலங்கள்!

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள புல்மோட்டைக் கடற்கரைப் பகுதியில் இரு இளம்பெண்களினதும் ஒரு நடுத்தரவயதுப் பெண்ணினதும் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பெண்களினது சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (ராமா)

## அந்தச் சிறுமி கண்மூடிவிட்டது

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்க்கடிக்கு இலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கோப்பாய் தெற்கைச்சேர்ந்த அந்தச்சிறுமி கனகராசா தனுஷா (9 வயது) நேற்று முன்தினமிரவு இறந்துவிட்டார்.

இச்சிறுமி பற்றிய விபரம் நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வந்தது தெரிந்ததே. (ஐ)

## சென்னையில் ரொமேஷ் இன்று டில்லி புறப்பாடு

(சென்னை)

சென்னையிலிருந்து நேற்றுக் காலை கொழும்பு சென்றிருந்த இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி நேற்றிரவு சென்னை திரும்பினார்.

இவருடன், இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே. என். டிக்ஷிற்றும் வந்திருந்தார்.

கொழும்பில், ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவுடன்

(5-ம் பக்கம் பார்க்க)

## சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கான — யாழ். பல்கலைக்கழக மாணவரின் பாதயாத்திரை திட்டமிட்டபடி ஆரம்பம்

(எம். ரி. சந்திரகுமார்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தாம் திட்டமிட்டபடி நேற்றுத் தமது பாதயாத்திரையை ஆரம்பித்தனர்.

எட்டுநாட்கள் நடைபெறவிருக்கும் இப்பாதயாத்திரையின் முதல் நாளான நேற்று யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து காலை 9-30 மணியளவில் ஆரம்பித்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு, குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி; 18 மாதங்களுக்கு மேலாக ராணுவ முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் ஒன்றுமறியாப் பாவியான தமிழ் இளைஞர்களை "விடுதலைசெய் அல்லது விசாரணை செய்" எனக்கோரி இந்தப்பாதயாத்திரையை பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்துள்ளார்கள்.

நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவ மாணவிகள் சீருடைகளில் கறுப்புப் பட்டி அணிந்து கொடிய வெய்யிலின் களைப்பையும் பொருட்படுத்தாது மேற்கொண்ட இப்பாதயாத்திரையில் மாணவர் பிரதிநிதி ஒருவர் ஒலிபெருக்கியில் "வதைமுகாம்களில் 18 மாதங்களுக்கு

(5ம் பக்கம் பார்க்க)

★ கிளிநொச்சி தாக்குதல் —

## தமிழ்ஈழ ராணுவம் உரிமை கோருகிறது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பொலிஸ்-இராணுவக்கூட்டு முகாம் தாக்குதலுக்கு 'தமிழீழ ராணுவம்' நேற்று உரிமை கோரியுள்ளது.

'தமிழீழ ராணுவம்' நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

"23-ம் திகதி நள்ளிரவில் இருபது வீரர்கள் அடங்கிய எமது இராணுவப் பிரிவினர், பொலிஸ்-இராணுவ கூட்டு முகாம் ஆகிய கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் மீது மேற்கொண்ட திடீர்த்தாக்கு

(5ம் பக்கம் பார்க்க)

## 3 மக்கள்வங்கி கிளைகளில் நகைகள் மீளளிப்பு?

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்கள் வங்கிக்கிளைகளின் முன்பாக அடகு வைத்தோர் சங்கம், தங்கள் நகைகளை மீளளிக்குமாறு கோரி தொடர்ச்சியாக நடத்திவந்த மறியல் போராட்டத்தின் விளைவாக மேலும் மூன்று பிரதான கிளைகளில் வைக்கப்பட்ட நகைகள் அடுத்தவாரம் மீளளிக்கப்படுமெனத் தெரியவந்துள்ளது.

யாழ் பிரதான வீதிக் கிளை, சுன்னாகம் கிளை, காங்கேசன்துறைக் கிளை ஆகிய மூன்று மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்களுக்கு நகைகள்

(8ம் பக்கம் பார்க்க)

# மட்டுநகரில் கண்ணிவெடி: மூவர் பலி! 3000 பேர் அகதிகள்; 35 வீடுகள் சேதம்!

(ஏ. வி மாணிக்கம்)

மட்டக்களப்பு-ஆரையம்பதியிலுள்ள பூநொச்சிமுனை வீதியில் நேற்றுக்காலை புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்தமையால் ஜீப்பில் சென்ற இரு உதவி இன்ஸ்பெக்டர்களும் ஒரு சமையல்காரனும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்; ஜீப்வண்டி முற்றுச் சேதமுற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரகசியப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் அசோக தர்மசிறி தேசிய புலனாய்வுப் பிரிவு சப் இன்ஸ்பெக்டர் டேவிட் பிரேமசிங்க (50 வயது), சமையல்காரன் அஜித் அனுரவீர (19 வயது) ஆகியோரே பலியானவர்களாவர்.

### மாணவர் பலி

இச்சம்பவத்தின் பின்னர் அப்பகுதிக்குச் சென்ற சொமாண்டோ பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பாடசாலை மாணவர்களான ஆரையம்பதியைச் சேர்ந்த சுரேஷ் இளையதம்பி 16 வயது) காம்பதி மகேந்திரன் 14வயது) ஆகியோர் மரணமானார்கள்.

மேலும் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களில் நால்வர் காணாமல் போய்விட்டதாக

(5-ம் பக்கம் பார்க்க)

## "ஈழ. தே வி மு. முக்கிய நிபந்தனை"

(யாழ்ப்பாணம்)

'ஈழம் செய்திப் பலகை'யின் இன்றைய தகவல் இது

போர் நிறுத்த உடன்பாட்டுக்கு வர ஈழ தேசிய விடுதலை முன்னணி 10 அம்ச நிபந்தனை.

(8ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு சில்லு உழவு இயந்திரம், (லைலண்ட் மாஸ்டர்) பெட்டி உழவு இயந்திரத்துடனும் விற்பனைக்குண்டு. எஸ். சின்னத்துரை, உடுவில் தெற்கு, பாலாவோடை, மானிப்பாய் அல்லது மானிப்பாய் ரோட், இணுவில் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 920

## தவறிவிட்டது

இல: 557392408V இலக்க திருமதி நிரஞ்சனி சந்திரதாசன் என்பவருடைய அடையாள அட்டையுடன் சிறிய தொகைப் பணமும், கோவில் வீதி, நல்லூர் வீதி ஆகியவற்றுக் கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்: 292/2, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 925

## தேவை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு முழுநேர முகாமையாளர் ஒருவர் தேவை. 30-9-85க்கு முன்னர் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். தகைமைகள் பற்றிய விபரங்களை தேவஸ்தான அலுவலகத்தில் அல்லது நேரில் என்னிடம் அறியலாம். செயலாளர், (மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை), அரசாங்க வைத்தியசாலை, மானிப்பாய். 880

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பண்டித மணியின் இலக்கிய வழி

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய இலக்கிய வழி மறுபிரசுரமாக வெளிவந்துள்ளது. ஜி. சி. ஈ. உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக உள்ள இலக்கிய வழியின் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டே இலக்கிய வழி மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. என்று பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் தெரிவிக்கிறார்.

## வதிரியில் இன்று மல்லிகை அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

'மல்லிகை' 21 வது ஆண்டு மலர் அறிமுகக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை வதிரியில் நடைபெறவுள்ளது.

வதிரி தமிழ் மன்றத்தினரால் நடாத்தப்படும் இக் கூட்டம் மன்ற மண்டபத்தில் திரு. க. பாரிவள்ளல் தலைமையில் நடைபெறும்.

தெணியான் கலாநிதி சபா ஜெயராசா, வைத்தியகலாநிதி எம். கே. முருகானந்தம், குப்பிளான் ஐ. சண்முகம், செல்வி கே. தியாகராசா, மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா ஆகியோர் உரையாற்றுவார்கள்.

---

## வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

அச்சுவேலி

### வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட சுமார் 7000 (ஏழாயிரம்) வெற்றுச் சாக்கு விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- ம் மீளத்தராத பணமாக ரூ 5/-ம் சங்கக் காரியாலயத்தில் 05-10-85ந் திகதிக்கு முன் கட்டி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 10-10-85ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விண்ணப்பிக்கும்போது என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்' என்று குறிப்பிடல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
வலி கிழக்கு வடபகுதி
பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கம், அச்சுவேலி.

923

---

MASTER OF SCIENCE IN PLANT PHYSIOLOGY AND HORTICULTURE

Applications will be entertained by me up to 30th November 1985 from candidates who possess B. Sc. Special / B Sc. General or B Sc. Agriculture with 1st or 2nd class or any other equivalent degree for registration for the Degree of Master of Science in Plant Physiology and Horticulture for the academic year 1986.

Application forms together with prospectus could be obtained from the Assistant Registrar / Academic either in person or by post from 15th October, 1985.

Those who wish to obtain in person are required to produce a receipt for Rs. 25/- received from shroff, Finance Branch of the University of Jaffna. Those who wish to obtain by post are required to send a Money Order / Postal Order drawn in favour of Bursar, University of Jaffna together with a self addressed envelope of 3" x 9" in size affixing stamp to the value of Rs. 4/- and cents -/60 only.

Registrar,
University of Jaffna,
Jaffna.

20-9-1885.

934

---

இலங்கை மின்சார சபையின்

## முக்கிய அறிவித்தல்

மின்தடை

1985-09-29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணிவரை இலங்கை மின்சார சபை யாழ் டிப்போவின் முக்கிய பராமரிப்பு வேலை காரணமாக யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள பல உபமின் நிலையங்களுக்கு மின் விநியோகம் தடைப்படும் என மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

மின்பொறியியலாளர்,
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
கன்னாகம்

929

---

## 2-வது பிறந்ததின வாழ்த்து



### இந்திரகுமார் வித்தியா

முன்னாள் யாழ். மாநகரசபை உதவிமேயரும், சமாதான நீதவானுமான திரு. கே. வி. தெய்வேந்திரன் அவர்களின் பேர்த்தி தெய்வேந்திரன் இந்திரகுமார் வித்தியா தனது 2-வது பிறந்ததினத்தை இன்று லண்டனில் கொண்டாடுகின்றார். வித்தியாவின் சகல நலன்களுக்காகவும் இறைவனை வேண்டி அவரது அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பீட்டி, மாமன்மார், மைத்துனர்மார், மைத்துனிமார், சித்தப்பாமார் மற்றும் உறவினர்கள் வாழ்த்துகின்றனர்.

சோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். 932

---

## வெளிநாடு பிரயாணம்

★ அமெரிக்கா, ★ கனடா, ★ பிரான்ஸ், ★ ஜெர்மனி

செல்ல விரும்பும் பிரயாணிகள் என்னுடன் நேரில் வந்து சந்திக்கவும்.

எதிர்பாராத போக்குவரத்துத் தடையால் நான் திங்களன்று (23-9-85) கொழும்பு செல்ல முடியவில்லை என்பதை அறிவிக்கின்றேன்.

இன்று முதல் சனி (28-9-85 வரை

வ. நல்லையா,
அலவத்தை, அளவெட்டி.

[916]

---

## தாயின் அழைப்பு

எனது மகன் சிறிஸ்கந்தராஜாவுக்கு, இதைப் பார்த்தவுடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

திருமதி சின்னமணி துரைராஜா.
கூழாவடி, ஆனைக்கோட்டை. (931)

---

## முக்கிய அறிவித்தல்

பலாலி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட அனைவரையும் அதிகரித்த சம்பளம் சம்பந்தமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஒரு கிழமைக்குள் என்னை பலாலி உபதபால் நிலையக் கட்டிடத்தில் காலை 8 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்குமிடையில் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். கணக்குப் பார்க்கும் செலவு ரூபா ஐம்பது (50/-) கொண்டுவரவும்.

தலைவர்,
பலாலி மத்தி கிராம அபிவிருத்தி சங்கம்.

(936)

---

## விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

(கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்)

### 87 A/L அளவையியல் (Logic) புதிய வகுப்பு

யாழ். பிரபல ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் அவர்கள்

ஆரம்பம்: 28-9-85 பி. ப. 1-00மணி.

918

---

## நல் நன்றி நவிலல்

### திருவாட்டி எலிசபேத் ஆசிநாதர்

(மாணிக்கம்மா)

9-9-85ல் அமரத்துவமுற்ற அன்னாரின் மறைவு குறித்து எம்துருத்துயரில் பரிவன்புடன் பங்குகொண்டு ஆறுதல் கூறி பல விதத்திலும் பல வகையிலும் உதவி ஒத்தாசைகள் நல்கிய ஆயர்கள், குருக்கள், துறவிகள், கன்னியர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

விசேடமாக யாழ் திருச்சிலுவை மருத்துவமனை கன்னியர் ஊழியர்களுக்கும் காங்கேசன்துறை ஊறணி திருமறைப்பங்கு மக்களுக்கும் மிக மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

க. யோ. ஆசிநாதர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
ஆசி இல்லம், காங்கேசன்துறை.
13-9-85. (935)

---


## ஓராண்டு நினைவஞ்சலி

### திரு. முத்ததம்பி நவரத்தினம் B.A.

(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

மலர்வு: 03-11-1923

உதிர்வு: 08-10-1984



அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எங்கள் அனைவரையும் துருத்துயரத்தில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எம் தெய்வமே! அணைந்துவிட்ட உங்கள் நினைவுச்சுடர்கள் எங்களின் இதயங்களில் என்றும் அணையாத்தீபமாகப் பிரகாசிக்கின்றன. தங்களை இழந்து ஓராண்டு பூர்த்தியாகும் இவ்வேளையில் தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்.
கண்ணகியம்மன் கோவிலடி,
சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். (875)

● போபால் விஷவாயு விபத்து ● போயிங் கனிஷ்கா விபத்து ● பாதுகாப்புச் சீர்குலைவு

# இந்திய அமைச்சரவை மாற்றத்தின் முக்கிய காரணங்கள்!

புதுடில்லி, செப்-26

போபால் விஷவாயுக் கசிவு; அயர்லாந்துக் கரையில் இந்திய போயிங் விபத்து ஆகியவற்றினால் ஏற்பட்ட நெருக்கடி நிலையும், இந்திய உள்நாட்டு – வெளிநாட்டுப் பாதுகாப்பு விடயங்களில் ஏற்பட்ட சில குழப்ப நிலைகளுமே இந்திய அமைச்சரவை மாற்றத்துக்கான முக்கிய காரணங்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

புதிய அமைச்சர்களும், இணை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோர் நேற்று இந்திய ஜனாதிபதி ஸெயில்சிங் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

"சிறந்த சமநிலையான அமைச்சரவை சொன்று அமைக்கப்பட்டுள்ளது" என்று பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார் அத்துடன் இந்த அமைச்சரவைமூலம் சிறந்த பணிகளை எதிர்பார்க்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இணை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட திருமதி மரகதம் சந்திரசேகர் அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஐந்து முக்கிய பொதுச் செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. அஹமத் பட்டேல், திரு. தருண்கோ கோய், திரு. ஒஸ்கோ பெர்ணாண்டஸ், திரு. ஜிதேந்திர பிரசாத் ஆகியோர் ஏனைய நான்கு பொதுச் செயலாளர்களாவர்.

புதிய அமைச்சரவை மாற்றங்களில் திரு நரசிம்மராவ் பொறுப்பில் விடப்பட்டுள்ள மனித திறன் துறை அமைச்சு பிரதானமான தொன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சு கல்வி, இளைஞர் விவகாரம் விளையாட்டு உட்பட இளைஞர் நலன்பேணும் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இதுவரை காலமும் பாதுகாப்பமைச்சு திரு. நரசிம்மராவின் பொறுப்பிலிருந்தது. ஆனால் இந்த அமைச்சு தற்போது திரு ராஜீவ் காந்தியின் கைக்கு மாறியுள்ளது இதன் இணையமைச்சராக திரு காந்தி, தமது நெருங்கிய உறவினரும், இ காங்கிரஸின் முக்கிய புள்ளிகளில் ஒருவருமான திரு: அருண் நேருவை நியமித்துள்ளார். இவரிடம் உள்நாட்டுப் பாதுகாப்பு விடயங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (கி)

உலகச் செய்திகள்

சிறுவர் பாடல் நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

சத்தியசீலன் எழுதிய 'கப்பல்' என்னும் சிறுவர் புதிர்பாடல் நூல் அறிமுக விழா அவரது பிறந்த ஊரான அல்லைப்பிட்டியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

## கிறீன்பீஸ் இயக்கத்துக்கு நஷ்டஈடு!

### பிரான்ஸ் அறிவிப்பு!!

பாரிஸ், செப்-26

நியூஸிலாந்தில் கிறீன்பீஸ் இயக்க றெயின்போ வோரியர் கப்பல் மூழ்கடிப்பிற்குத் தமது முன்னாள் பாதுகாப்பமைச்சரும், புலனாய்வுத் துறைத் தலைவருமே காரணமென்று பிரான்ஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பிரான்ஸ் பிரதமர் திரு. பபுயுஸ் தொலைக் காட்சியில் தோன்றி நேற்று இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்பமைச்சர் திரு சார்லஸ் ஹேர்னு. மற்றும் புலனாய்வுத் துறைத் தலைவர் ஆகியோரைத் தாம் தனித்தனியே சந்தித்தபோது அவர்களே அம்மூழ்கடிப்புச் சம்பவத்துக்குப் பொறுப்பென்பதைத் தாம் அறிந்துகொண்டதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் அச்சம்பவம் தொடர்பாக 'கிறீன்பீஸ்' இயக்கத்துக்கும் அதன் 'றெயின்போ வோரியர்' கப்பலில் கொல்லப்பட்ட படப்பிடிப்பாளரின் குடும்பத்திற்கும் நஷ்டஈடு வழங்குவதாகவும் குறிப்பிட்டார். (கி)

### இவர்களின் விபரம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களில் 84/85 கல்வி ஆண்டுக்குரிய மகாபொல புலமைப்பரிசிலை இதுவரை பெறாதோர் இது சம்பந்தமாக பல்கலைக்கழக துணைவேந்தர் திரு சு. வித்தியானந்தனுடன் தொடர்பு கொள்ள மாணவர்கள் பெயர் முதலிய விபரங்களைத் தன்னிடம் தருமாறு மாணவர் அவை கேட்டுள்ளது. (ச)

★ 'அழிவின் மேல் அழிவு'————

## மாடிக்கட்டிடம் இடிந்து வீழ்ந்ததில் மீட்பு வேலையில் ஈடுபட்டோரும் பலி!

### மெக்ஸிக்கோவில் சம்பவம்!!

மெக்ஸிக்கோசிட்டி, செப்-26

மெக்ஸிக்கோவில் நேற்று மீட்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள்மீது மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் சுமார் ஆயிரம்பேர்வரை மரணமாகியிருக்கலாமென்று அஞ்சப்படுகின்றது.

இம்மீட்பு வேலையாட்களில் வெளிநாட்டவரைச் சேர்ந்த பலரும் சிக்கியுள்ளனரென்று தெரிவிக்கப்பட்டது.

பல அடுக்கு கொண்ட அம்மாடிக் கட்டிடம் பூகம்பத்தினால் ஆட்டங்கண்டிருந்தது. இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருந்தனர் அவர்களை மீட்கும் வகையிலேயே பல மீட்புப்பணியாளர்கள் இரவு பகலாக மீட்புவேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அக்கட்டிடத்தின் இடிபாடுகளுக்குள் ஏற்கனவே சிக்கியிருந்தவர்கள், மற்றும் அது இடிந்து வீழ்ந்தபோது சிக்குண்ட மீட்புப் பணியாளர்களின் எண்ணிக்கை என்பனவே ஆயிரக்கணக்கிலுள்ளன.

இதேவேளை, மெக்ஸிக்கோவில் தொடர்ந்து இடிபாடுகளை அகற்றும் வேலைகள் முழுமூரமாக நடைபெறுகின்றன. மெக்ஸிக்கோ நகர் ஒரு போரழிவுப் பிரதேசம்போலக் காட்சிதருகின்றது.

வண்டிகள், தீயணைப்பு இயந்திரங்கள், எங்கும் துர்நாற்றம், மனித முனகல்கள், அம்புலன்ஸ் மயமாகவே காணப்படுகின்றன. (கி)

## அடையாளம் காணப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள அரையம்பதி என்னுமிடத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடந்தவர் தாளங்குடாவைச் சேர்ந்த தா நல்லதம்பி என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

## நல்லை ஆதீனத்தில் பண்டித வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்தில் பாலபண்டிதர்களுக்கான வகுப்புகள் இம்மாதம் 28 ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

பிரதிவாரமும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் இவ் வகுப்புக்களில் திருவாளர்கள் சொக்கன் வித்துவான் குமாரசாமி, பொன்னுத்துரை, திருமதி வசந்தாவைத்தியநாதன் உட்பட பலர் விரிவுரைகள் நிகழ்த்துவுள்ளனர். (ச)

மொசாம்பிக்கில்————

## வெடிகுண்டு கிடங்குகள் சேதம் 4 பேர்பலி; 40 பேர் காயம்!

லண்டன், செப் 26

மொசாம்பிக் நாட்டில் வெடிமருந்துக் கிடங்குகளில் ஏற்பட்ட திடீர் குண்டுவெடிப்புகளில் பெரும் தீவிபத்து ஏற்பட்டது. நான்கு பேர் பலியானார்கள், 40 பேர் காயமடைந்தனர்.

மொசாம்பிக்கின் தலைநகரான முபோட்டோவிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது

மொசாம்பிக்கிலுள்ள அரசுக்கெதிரான கெரில்லாக்களே இச்சம்பவத்துக்குப் பொறுப்பென்று தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் வெடிமருந்துக் கிடங்குகளைத் தாக்கிச் சேதம் விளைவிப்பதே தமது நோக்கமென்று அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டது

இவ் வெடிமருந்துக் கிடங்குகள் சேதமாக்கப்பட்டதையடுத்து முபோட்டோ நகரம் பெரும் அல்லோல கல்லோலப் பட்டது.

அந்நகரில் இருந்த மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர் குண்டு வெடிப்புக்களின் அதிர்ச்சியினால் வீட்டு ஜன்னல்கள் கதவுகள் என்பன சேதமடைந்தன

இத்துடன் முபோட்டோ சர்வதேச விமான நிலையமும் அமர்க்களப்பட்டது பயணிகள் கலவரமடைந்து காணப்பட்டனர். இங்கு நின்ற விமானங்களும், இறங்க வந்த விமானங்களும் வேறு விமான நிலையங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

மொசாம்பிக் தேசிய வானொலி மக்களை அமைதியாக இருக்கும்படி அறிவிப்புக்களை அடிக்கடி கூறிக் கொண்டிருந்ததைக் கேட்க முடிந்தது (கி)

★ ஆசிய நாட்டவர் பாதுகாப்பு————

## பிரிட்டனில் இந்திய, பாக்., வங்காள தூதுவர்கள் கூட்டு நடவடிக்கை!

லண்டன், செப்-26

பிரிட்டனில் ஆசிய இனத்தவர்களின் பாதுகாப்புக் கருதி இந்திய, பாகிஸ்தான், பங்களாதேஷ் தூதுவர்கள் கூட்டாகச் செயற்படத் தொடங்கியுள்ளனர்

அண்மையில் பேர்மிங்ஹாம் நகரில் இடம்பெற்ற ஆசிய இனத்தவர்மீதான வன்முறை. அதில் இரு ஆசிய இளைஞர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக இவர்கள் கவலை வெளியிட்டுக் கூட்டறிக்கை விட்டனர்.

அத்துடன் பிரிட்டன் உள்துறை அமைச்சர் திரு டக்ளஸ் ஹேர்ட்டையும் இவர்கள் சந்தித்து ஆசிய நாட்டவரின் பாதுகாப்புக் குறித்துப் பேசினர்

இந்த மூன்று ஆசிய நாட்டுத் தூதுவர்களும் இவ்வாறு கூட்டாகச் செயற்பட்டது. கடந்த 10வருடங்களில் இதுவே முதற் தடவையாகும் என்று தெரிவிக்கப்பட்டது

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் திரு டக்ளஸ் ஹேட் இவர்களுடைய விளக்கங்களைக் கேட்டறிந்தார். அத்துடன் எதிர்காலத்தில் ஆசியநாட்டவருக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதாகவும், இதற்கென விசேட பொலிஸ் பிரிவை ஏற்படுத்துவதாகவும் உறுதியளித்தார்

இதேவேளை பேர்மிங்ஹாமில் ஆசிய நாட்டவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கலகங்களில் ஏற்பட்ட சேதங்களுக்கு பிரிட்டிஷ் அரசு நஷ்டஈடு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (கி)

## மணிவாக்கு

காலம் கருதிருப்பர் கலங்காது
ஞாலம் கருதுபவர். — திருக்குறள்.

# நமது நோக்கு

## நல்ல சூழ்நிலை இது: நழுவ விடலாமா?

ராணுவ நடவடிக்கைகளையும் அமைதி முறைகளையும் இணைத்து செயல்படுத்துவதின் மூலம் இலங்கை தீவிரவாத பிரச்னைக்கு முடிவுகட்ட தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அண்மையில் கருத்து வெளியிட்டிருந்ததை எவரும் அதற்கிடையில் மறந்திருக்க மாட்டார்கள்.

போர் என்றால் போராயிருக்க வேண்டும். அமைதியென்றால் அமைதியாக இருக்கவேண்டும் என அவர் முன்னர் கூறிவந்த கருத்துக்கு இது மாறு என்று கருத முடியாது. இரண்டையும் ஒரே சமயத்தில் செயற்படுத்துவதென்பது அவருக்கேயுரிய புதிய வழிமுறையாக இருக்கலாம்.

ஒரு புறம் போரும், மறுபுறம் அமைதியும் என்று கூறுகிறவர்கள் வேறு எங்கோ இருக்கவேண்டியவர்கள் என்று கூறிய முன்னாள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ இப்பொழுது எங்கிருக்கிறார் என்பதை தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அரசின் திறந்த பொருளாதாரத் திட்டத்தைக் கடுமையாக விமர்சிக்கத் தலைப்பட்டதின் விளைவே அமைச்சரவையிலிருந்து அவருக்கு கிடைத்த 'கல்தா' என்றும் கூறப்படுகின்றது. அது வேறு விடயம்.

இலங்கையின் வெளிஉறவு அமைச்சர் ஜனாப் ஷாஹுல் ஹமீது அவர்கள் ஐ. நா. சபையில் கடந்த 24ந் திகதி இரவு பேசியிருப்பது இன்னொரு விதமாக அமைந்துள்ளது.

''ஜனநாயகம் செயல்படும் நாடு என்றமுறையில் பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதில் எமது நாடு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது'' என்று கூறியுள்ளார் அவர்.

''ராணுவ நடைமுறைகளையும் அமைதி முறைகளையும் இணைத்துத் தீர்வு காண்பது'' என்ற ஜனாதிபதியின் கூற்றை இது பிரதிபலிக்கவில்லை.

''பல மொழிகள், பல இனங்கள், பல மதங்கள் உள்ள ஒற்றை ஆட்சி அரசமைப்பைக் கொண்டது இலங்கை'' என்று குறிப்பிட்டுள்ள ஜனாப் ஹமீது; ஒரு சிறுபான்மை இனத்துக்கும் ஏனைய இனங்களுக்குமிடையில் ஒருவித மனத்தாங்கல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துமுள்ளார். அதாவது தமிழ் இனத்தவர்களுக்கும் ஏனைய சிங்கள முஸ்லிம், பறங்கி, கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையில் ஏதோ மோதல்கள் உருவாகியுள்ளது போல அவர் தமது பேச்சில் சாதுரியமாகக் குறிப்பிட்டு தமிழ் இனத்தவர்களைத் தனிமைப்படுத்த முயன்றிருக்கிறார்.

எதுவானாலும் உலக அரங்கில் இலங்கை அரசு தன்னை நல்லபிள்ளையாகக் காட்டிக் கொள்ளவும், தமிழ் இனத்தவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை மூடி மறைக்கவும் மிகுந்த பாடுபட்டு வருகின்றது என்பது தெளிவு.

ஜனாப் ஷாகுல் ஹமீது கூறுவதுபோல, அமைதிப் பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வுகாண்பதை அரசு மனமார விரும்புவதாயின் இன்று உருவாகியுள்ள சூழ்நிலையைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

பேச்சு வார்த்தைகளுக்கான அடிப்படைத் திட்டத்தை ஆராய்வதற்குத் தமிழ் அமைப்புக்கள் ஆயத்தமாகவுள்ளன ஆனால் அதற்குமுன் அமைதிச் சூழ்நிலை தோற்றுவிப்பதற்கான போர் நிறுத்தம் ஏற்படவேண்டும். அரசு விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்கவும் அவர்கள் தயார். அதேவேளை தங்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 10 அம்ச நிபந்தனையை அரசு ஏற்கவேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பத்து அம்சங்களில் போர் நிறுத்த அமுலைக் கண்காணிக்கும் குழு பற்றியதும் ஒன்று.

ஏற்கனவே அமுலில் இருந்த போர் நிறுத்தம் வெறும் கேலிக்கூத்தாக முடிந்ததால் இம்முறை உண்மையான போர் நிறுத்தம் ஏற்படவேண்டுமென்பதில் அவர்கள் கண்டிப்பாக உள்ளனர்.

அரசு தன்போக்கில் ஒரு குழுவை நியமித்து அதனைத் தமிழ்க் குழுக்கள் ஏற்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற ஒரு நடுவர் ஸ்தாபனம் இதனைப் பொறுப்பேற்பதை அவர்கள் விரும்புகின்றார்கள்.

ஏற்கனவே இஸ்ரேலியரின் மொஸாட், பிரிட்டிஷாரின் எஸ். ஏ. எஸ். போன்ற வெளிநாட்டு அமைப்புக்கள் இந்த உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதால் நியாயமான ஒரு காரியத்திற்காக உலக பொது அமைப்பு ஒன்றைக் கண்காணிப்புக்கென்று அழைப்பதில் தவறிருக்க முடியாது. ஏன், வெளிநாடான இந்தியாவை சமரச முயற்சிக்கு அழைத்திருக்கும்போது தமிழ் அமைப்புக்களின் இந்தக் கோரிக்கையை இலங்கை அரசு தட்டிக்கழிக்க நியாயமில்லை.

இரு தரப்பாரும் உண்மையான போர் நிறுத்தத்தை மேற்கொண்டு அதன்பேரில் அமைதித் தீர்வொன்றைக் காண்பதற்கு உதவக்கூடியதாக உருவாகியுள்ள இந்தச் சூழ்நிலையை அரசு சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்றே நம்புகிறோம்.

தற்போது இலங்கையில் தங்கியுள்ள இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி மேற்கொண்டுவரும் முயற்சிகள் இந்த வகையில் நல்ல பலனைத் தரவேண்டும்.

# 'கொள்ளைகள், தாக்குதலினால் முழுமையாக இயங்க முடியவில்லை!'

## அஞ்சல் தொ. சே. சங்க கூட்டத்தில் தலைவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''கடந்த ஆண்டு, சோதனை மிக்க ஆண்டாக இருந்துள்ளது. யாழ். பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட சகல அஞ்சல் அலுவலகங்களுமே கொள்ளையிடப்பட்டோ அல்லது தாக்குதலுக்குள்ளாகியோ வந்துள்ளன. இதன் காரணமாக ஆறுமாதங்களுக்கு மேலாக இவ்வலுவலகங்கள் இயங்காமல் மூடிக்கிடந்தன. இன்றும் பல அலுவலகங்கள் முழு அளவிலான கடமைகளை ஆற்றமுடியாத நிலையில் இருக்கின்றன. பொது மக்களுக்கு அதிலும் ஏழை மக்களுக்கு மிகவும் தேவைப்படும் சேவை எமது அஞ்சற்சேவையாகும். அச்சேவையை நாம் முறையாக அவர்களுக்கு வழங்க முடியாதிருக்கிறோம்''

இவ்வாறு அஞ்சல் தொலைதொடர்புச் சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பணைக்கிளையின் இருபத்தெட்டாவது ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. அ. குணபாலசிங்கம் கூறினார்.

யாழ். அஞ்சல் அலுவலக இளைப்பாறு மண்டபத்தில் கிளைத்தலைவர் திரு அ. குணபாலசிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. யாழ் பிரதம அஞ்சல் அதிபர் திரு எஸ். பி ஞானப்பிரகாசம், முல்லைத்தீவின் பெரும்பாக அத்தியட்சர் திரு எஸ். எம் சேதுகாவலர், மட்டக்களப்பு பெரும்பாக அத்தியட்சர் திரு. கே. கனகசுந்தரம், மன்னார் பிரதம அஞ்சல் அதிபரும் தாய்ச்சங்கத்தின் உபதலைவருமான திரு. பி தங்கராசா, முன்னாள் அஞ்சல் அலுவலகங்களின் அத்தியட்சர் திரு ஏ. கி. கந்தசாமி ஆகியோர் விசேட விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தலைவர் தொடர்ந்து பேசுகையில்;

''பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகளுக்கு தாக்குக்கொடுக்க முடியாது எமது உத்தியோகத்தர்கள்பட்ட அனர்த்தங்கள் அநேகம். முருங்கன் அஞ்சல் அலுவலகத்தில் உயிர் இழந்தவர்களும், படுகாயமடைந்தவர்களும், அச்சுவேலி அஞ்சல் அலுவலகத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டு நிகழ்ச்சிகளும், யாழ். அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றுபவர்கள் பட்ட அவஸ்தைகளும் எம்மைத் திகிலடையச் செய்த சில நிகழ்வுகளாகும். ஓய்வூதியம் கொடுப்பனவுகள் எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் கொடுக்கவேண்டியுள்ளது இவை அனைத்தையும் பார்த்து எமது நிருவாகத்தினர் வாழாவிருக்கிறார்களேயன்றி எமக்காக பரிந்து பேசவோ அல்லது வலிந்து வந்து உதவவோ முயலவில்லை; எமது சங்கத்தின் உதவியுடனேயே நாம் மேற்கொண்ட முறையீடுகளுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## வைத்தீஸ்வரா அதிபர் விளக்கம்

தங்கள் 'ஈழநாடு' (24-09-1985) இதழில் ஏழாம் பக்கத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. எல். ஜேய் சுந்தரராஜ் அவர்கள் தவறினை நிவர்த்தி செய்யுமாறு கோரித் தங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் இடம்பெற்றுள்ள தவறினை மிகவும் மனவருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்

யாழ். வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 1500 மீற்றர் ஓட்டத்தில் எமது வைத்தீஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் இ. கிருபாமூர்த்தி என்பவரே முதலிடத்தைப் பெற்றார். 19-09-1985 திகதியிட்ட 'ஈழநாடு' இதழில் இடம்பெற்ற இச்செய்தியில் எவ்வித தவறும் இல்லை.

யாழ். வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் வேறு வட்டாரங்களைச் சேர்ந்த எந்த ஒரு மாணவனும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படாதபோது, இப்போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஒருவரே முதலிடம் பெற்றார் என்று சொல்வது பொருந்தாது.

சிவ. சரவணபவன்
(அதிபர்)
யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்

# வல்லிபுர ஆழ்வார் இன்று வண்ணத்தேரேறுகிறார்

ஏ.என்.எஸ். திருச்செல்வம்

வேண்டியதை வேண்டியபடி அளித்தருளும் விண்ணவர் பெருமான் வல்லிபுர ஆழ்வார், பிரபஞ்சத்தில் பிறவிப் பெருங்கடலில் மூழ்கி அஞ்ஞானத்தில் அறிவிழந்து அல்லல்படும் ஆன்மாக்களின் வல்வினைகளையெல்லாம் அறவேபோக்கி விட்டு இன்பம் பயக்கின்றார். பக்த அடியார்களைத் தன் பால் கவர்கின்றார். வேண்டியவரங்களையெல்லாம் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றார். இப்பெருமான் இன்று வண்ணத் தேரேறி அடியார் புடைசூழ அரோகரா கோஷம் வானைப் பிளக்க வீதிவலம்வரும் காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

தேரின் முழு அமைப்பையும் நாம் நோக்கும்போது கொழுந்துவிட்டுச் சுவாலித்து எரியும் அக்கினியின் அமைப்பை ஒத்திருப்பதைக்காணலாம்.

எம்பெருமானின் வருடாந்த மகோற்சவம் கடந்த 13-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று எம்பெருமான் தேரேறி வீதிவலம் வருகின்றார். நாளை கற்கோவளக்கடலுக்கு எழுந்தருளிச் சென்று தீர்த்தமாடுமாடுவார். மறுநாளான ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திலேயுள்ள கேணியிலே தீர்த்தமாடுவார்.

இராஜகோபுரமில்லாக்குறையைப் போக்கு முகமாக சுமார் 50 லட்சம் ரூபா செலவில் அழகிய சிற்பவேலைப் பாடுகளுடனான இராஜகோபுரமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது இராஜகோபுர வேலைகள் பூர்த்தியாகி கும்பாபிஷேகம் நடைபெற வெகுவிரைவில் திருவருள்பாலிக்க வேண்டும் என பக்த அடியார்கள் அவாவுகின்றனர்,

## ✯ இன்று வல்லிபுர ஆழ்வார் தேர் மஹோற்சவம்

ஆழியே வடிவம் ஆறாய் ஆறொடு நான்கும் ஆறாய்
வாழியே வாழி என்று வாழ்த்துதும் உன்னை என்றும்
ஊழியே வந்த போதும் உன்னுளே அடக்கிக் கொள்வாய்
பாழியே வாழும் அந்த முதலையைக் கொன்றாய் அன்று

மீனமாய்க் கடலில் வந்து மீனவர் வலையை மீறி
ஏனமாய்ப் பூமி கிண்டு ஆமையாய் உலகைத் தாங்கி
கானமார் குழலைத் தாங்கி காட்டில மந்தை மேய்த்து
வானமார் நிறத்தைக் கொண்டே வல்லியின் மடியில்
வீழ்ந்தாய்

— ஆழ்கடலான்

## கருணாகரர் திருவருள் வேட்டல்

உரும்பராய் ஊரின் மேற்கில்
உயர்திருக் கோவில் கொண்டே
பருவமாய் நமது உள்ளம்
பழுத்திடப் பக்தி யூட்டி
இரும்பினைக் காந்த மீர்க்கும்
இயல்பிலே யமைப்பு ரக்கும்
அருட்கரு ணாக ரப்பேர்
ஐங்கரப் பிள்ளை யாரே!

இனமொழி மதப்பூ சல்கள்
எண்ணிலா வகையிற் றோன்றி
மனவளை திகைக்கு றைதந்தெம்
வாழ்வையே வாட்டு தையா!
தினதரு ளிங்கு சத்தால்
தெருக்கடி நிலையைப் போக்கிப்
புனர்நலம் காண வைக்கும்
புதுமையைப் புரிகு வாயே!

— சாரதா

● தேர்திருவிழா இன்று வெள்ளி நடைபெறுகின்றது.

# யாழ். பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை விசாரணை செய் அல்லது விடுதலை செய்'' என்ற கோஷம் உட்பட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள், யுவதிகள் அனுபவிக்கும் இன்னல்களை விளக்கிய வண்ணம் சென்றுகொண்டிருந்தார்.

வழிகள் தோறும் பொதுமக்கள் ஆதரவு வழங்கிக் கொண்டிருந்தனர். சனசமூக நிலையங்கள் கிராமமுன்னேற்ற சங்கங்கள் உட்பட பல பொதுஸ்தாபனங்கள் பாதயாத்திரையாளருக்கு குளிர்பானங்கள் வழங்கி ஆதரவு அளித்ததோடு, பொதுமக்களும் பாதயாத்திரையாளர்களுடன் இணைந்து சென்றுகொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக விருந்தது.

பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, கே. கே. எஸ் வீதி, கொக்குவில் குளப்பிட்டிச் சந்தி, ஆனைக்கோட்டை, நவாலி, சோமசுந்தரம் வீதி, மானிப்பாய் வீதி என்பவற்றினூடாகச் சென்று மானிப்பாய் மெமோறியல் கல்லூரியை மாலை 5-30 மணியளவில் அடைந்தது.

அங்கு இரவைக்கழித்த பாதயாத்திரையாளருக்கான ஒழுங்குகளை பாதயாத்திரை அமைப்புக்குழுவினர் கவனித்தனர் பல்கலைக்கழக கலாசாரக்குழுவினரின் கருத்தரங்குகள், வில்லுப்பாட்டு உட்பட பல கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

பாதயாத்திரையின் 2-ம் நாளான இன்று மேற்படி கல்லூரியிலிருந்து புறப்படும் பாதயாத்திரை சண்டிருப்பாய், சங்கானை, சித்தங்கேணி, வழக்கம்பரை அரசடி, பண்டத்தரிப்பு வீதி என்பவற்றினூடாகச் சென்று பண்டத்தரிப்பை அடையும். (ச)

# 3-வது பிறந்ததின வாழ்த்து



## செல்வன் தங்கராஜா மருதராஜன்

மானிப்பாய் ''மருதமஹால்'' தங்கராஜா-ஜெயசோதி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் மருதராஜன் தனது மூன்றுவது பிறந்த தினத்தை இன்று (27- 09- 1985) தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அக்கா, சித்தப்பா, சித்தி, பெரியண்ணை, சுதா அண்ணை, மாமா, மாமி, சுபன் மச்சான், பெரியப்பா பெரியம்மா, சிறிஅண்ணை, சந்திரன் அண்ணை, வவா, பேபி, மஞ்சுளா, அசமாரி, றவி அன்ரி, மற்றும் உற்றார் உறவினர் மருதடியான் அருளாசி பெற்று பல கலைகளையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

S. S. தங்கராஜா

'மருதமஹால்', மானிப்பாய், 909

## ஆங்கில தினப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வித் திணைக்களத்தின் சுற்று நிருபத்துக்கமைய பாடசாலை மட்டத்திலான ஆங்கில தினப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. இதற்கு வேண்டிய சபை ஆயத்தங்களையும் ஆங்கில ஆசிரியர்களின் பாடசாலை அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் மேற்கொண்டுள்ளனர்.

# கொள்ளைகள்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பரிகாரங்கள் சில கிட்டியுள்ளன'' என்றார்.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:-

''அஞ்சல் அலுவலகங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கும் நோக்கத்துடன் தனியார் பாதுகாப்புச் சேவையை அறிமுகம் செய்தல். அஞ்சல் அலுவலகக் குடியிருப்புகளுக்கு வாடகை அறவிடுதல் தவிர்க்கப்படவேண்டும். தொலைபேசி இயக்குநருக்கு ஞாயிறு - விடுமுறை தினங்களுக்குரிய கடமை அலவன்ஸுகள் பாகுபாடின்றி வழங்கப்படவேண்டும். ஐம்பது சதவீத சம்பள உயர்வும் அத்துடன் வாழ்க்கைப்படியின் ஒவ்வொரு புள்ளிக்கும் ரூபா ஐந்து வீதம் படி உயர்வும் வழங்கப்படவேண்டும். அநுராதபுரம், திருமலை மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்த உத்தியோகத்தர்களுக்கு ஏற்ற வகையில் தகுந்த இடமாற்ற வசதிகள் செய்துகொடுத்தல் வேண்டும்.

### நடப்புவருட நிர்வாகிகள்

இவ்வாண்டுக்கான அலுவலர் தேர்தல் விபரம்: தலைவர்: திரு. அ குணபாலசிங்கம் (அஞ்சல் அதிபர் கொககுவில்), உப தலைவர்கள்: திரு. ஏ. என் சின்னத்துரை (அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணம்). திருமதி எம் செல்வமாணிக்கம் (அஞ்சல் பரிவர்த்தனை நிலையம், யாழ்ப்பாணம்), செயலாளர்: திரு எஸ் வைத்தீஸ்வரன் (அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணம்).

உதவிச்செயலாளரும், பொருளாளரும்: திரு ஏ. சுந்தரலிங்கம் (அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணம்).

# விரைவில் தீர்வு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர் மாநாடு நேற்று மாலை 5-30 மணியளவில் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திலுள்ள 'இந்திய இல்லத்தில்' நடைபெற்றது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

### மூன்றரைமணி பேச்சுக்கள்

''இலங்கை இனப்பிரச்னை குறித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் 2 மணி நேரமும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன் ஒன்றரைமணி நேரமும் பேச்சு வார்த்தை நடத்தினேன். நிலைமையை வழமைக்கு கொண்டு வருவது குறித்து முக்கியமாக இவர்களுடன் பேச்சு நடத்தினேன். யுத்த நிறுத்தத்தை இருபகுதியினரும் தீவிரமாக கடைப்பிடிப்பது பற்றியும் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது குறித்தும் முக்கியமாகப் பேசப்பட்டது.

''அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்படக்கூடாது. அவர்கள் மீதான தாக்குதலும், அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும். நாட்டில் எந்தப் பிரஜையும் தமது சொந்த இடங்களிலிருந்து தாக்குதல் காரணமாக இடம் பெயரும் நிலை இருக்கக் கூடாது. அப்பாவி பொதுமக்கள் தாக்கப்படுவது குறித்து இந்திய அரசு பெரும் கவலை கொண்டுள்ளது என்றும் இச்சம்பவங்கள் மனிதாபிமான அடிப்படையில் அவதானிக்கப்பட வேண்டும் என்றும் இலங்கை அரசுடன் விரிவாக பேசினேன்.

### இலங்கை அரசு உறுதியளித்துள்ளது

''இப்பிரச்னையைத் தீர்க்க சாத்தியமான சகல நடவடிக்கைகளும் எடுப்பதாக இலங்கை அரசு எனக்கு உறுதியளித்துள்ளது. இப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே எடுத்த நடவடிக்கைகள், தற்போது எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும், யுத்தநிறுத்தத்தை கண்காணிக்க அமைக்கப்பட்ட குழு பற்றியும் இலங்கை அரசு தரப்பில் எடுத்துக்கூறப்பட்டது.

''அண்மையில் புதுடில்லியில் ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் எடுத்துக் கூறப்பட்டது. நிலைமையை வழமைக்கு கொண்டுவருவது குறித்தும் பேசப்பட்டது. பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி பல சாதகமான பலாபலன்களைக் காண்பதற்கு முதலில் நாட்டில் அமைதி நிலவ வேண்டும்.

### கூட்டு முன்னணி பேச்சுக்கள்

''சென்னையிலும், புதுடில்லியிலும் ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களுடன் பேச்சு நடத்தினேன். தொடர்ந்தும் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும். யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்க சர்வதேச அமைதிப் படை அமைப்பது குறித்து ஈழம் தேசிய விடுதலை முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்தனர். இலங்கையில் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் யுத்தநிறுத்தக் குழுவினரின் நடவடிக்கைகளைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்று நான் அவர்களிடம் தெரிவித்தேன்.

### நேர்மையான யுத்த நிறுத்தம்

''யுத்த நிறுத்த நடவடிக்கைகள் கடுமையாக கடைப்பிடிக்கப்படவேண்டும். யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்க நேர்மை அவசியமானது. நிபந்தனைகள் விதிகள் போடப்படலாம். ஆனால் இந்த விடயத்தில் நேர்மை கடைப்பிடிக்கப்படாவிட்டால் எவ்வித பலனும் ஏற்படமுடியாது. தற்போது அமைக்கப்பட்டிருக்கும் யுத்த நிறுத்தக்குழு சுதந்திரமாக இயங்குவதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக என்று ஜனாதிபதி என்னிடம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன இந்த விடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்.

''தமிழ்த்தலைவர்கள், தமிழ் தீவிரவாதிகள் ஆகியோருக்கும் அரச தரப்பினருக்கும் இடையில் பேச்சுக்கள் எதுவும் நிறுத்தப்படவில்லை அவை தொடர்ந்து நடைபெறுகிறது. பிரச்னைக்கு சாத்தியமான தீர்வு வரும்வரை இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும். ஆனால் கொலைகளும், தாக்குதல்களும் தொடர்ந்து நடைபெறும்போது பேச்சுவார்த்தைகளை நடத்தமுடியாது.

### கிளிநொச்சி சம்பவம்

கிளிநொச்சி பொலிஸ் நிலைய தாக்குதலுக்கு ஈழம் தேசிய விடுதலை முன்னணி தாம் பொறுப்பில்லை என்று தெரிவித்துள்ளது ஆனால் சிறிய குழுக்கள் பற்றி என்னால் கருத்துக் கூறமுடியாது

''இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவரீதியாக தீர்வுகாண முடியாது இதற்கு பல நாடுகளிலிருந்து பல உதாரணங்களைக்கூற முடியும் பல நாடுகளில் இடம்பெற்ற, இடம் பெறும் சம்பவங்கள் இப்பிரச்னை இராணுவ ரீதியாகத் தீர்க்க முடியாது என்பதனை எடுத்துக் காட்டியுள்ளன. இராணுவ அணுகுமுறை இப்பிரச்னையைத் தீர்க்க ஒரு அணுகுமுறையாகக்கூட இருக்ககூடாது என்றார்.

''ஈழம் தேசிய விடுதலை முன்னணியினர் உட்பட சகலரும் இப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என விரும்புகின்றனர். பொறுமையாக இருந்தால் எந்தப் பிரச்னைக்குமே தீர்வுகாண முடியும். இப்பிரச்னைக்கு தாமதமின்றி கூடிய விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

''என்னைப் பொறுத்தவரை எவ்வளவோ வேலைகளை எல்லாம் தியாகம் செய்துவிட்டு இப்பிரச்னைக்கு அதிகமுக்கியத்துவம் செலுத்தி இங்கு வந்துள்ளேன். இப்பிரச்னையைத் தீர்க்க இந்தியா தன்னால் செய்யமுடிந்த அனைத்தையும் செய்யும். இங்குள்ள மக்கள் அனைவரும் இப்பிரச்னை குறித்து பெருங்கவலை கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள்.

''இலங்கை ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர், கிராமியத் தொழில்துறை அமைச்சர் திரு. தொண்டமான், கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகிய தலைவர்களை இந்த விஜயத்தின்போது சந்தித்தேன். அவர்களுடன் நீண்டநேரம் பேச்சு நடத்தினேன் ஏனைய பல தலைவர்களைச் சந்திக்க விரும்பினேன். ஆனால் நேரம் கிடைக்காததினால் சந்திக்கமுடியவில்லை.

''இலங்கையின் நன்மைக்காக மட்டுமன்றி இப்பிராந்தியத்தின் மொத்த நன்மைக்காகவும் இப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும் இது குறித்து ஒவ்வொருவரும் பெரும் அக்கறை கொண்டுள்ளார்கள்.

''மீண்டும் விரைவில் இலங்கைக்கு வருவேன் என எதிர் பார்க்கின்றேன்'' என்று அவர் தெரிவித்தார்.

# சென்னையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னும், அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடனும் நடத்திய பேச்சுக்கள், ஆலோசனைகள் குறித்து திரு. ரொமேஷ் பண்டாரி, ஈழத்தேசிய விடுதலைமுன்னணித் தலைவர்களுடனும், கூட்டணித் தலைவர்களுடனும், பேச்சுக்கள் நடத்தினார்.

இன்று புதுடில்லியிலும் திரு. ரொமேஷ் பண்டாரி, இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தியைச் சந்தித்து தமது கொழும்பு விஜயத்தின் முழு விபரங்களையும் சமர்ப்பிப்பார்.

# தமிழ்ஈழ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவில பொலிஸ் நிலையத்திற்கு பாரிய சேதத்தையும் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் இராணுவ அமைப்பையே சின்னாபின்னப்படுத்தி எதிரடிப் பொலிஸ் தரப்பிலும், இராணுவத் தரப்பிலும் ஏராளமான உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தினர், பின்னர் நடைபெற்ற நேரடி மோதலில் பொலிஸ், இராணுவத்தரப்பில் பெருமளவு உயிர்ச்சேதத்தை விளைவித்து அவர்கள் வசம் இருந்த ஆயுதங்களையும் கைப்பற்றினர். எமது தரப்பில் எதுவித உயிர்ச்சேதமோ. ஆயுத இழப்புக்களோ ஏற்படவில்லை. ஸ்ரீலங்கா அரசினர் கூறுவது அத்தனையும் உண்மைக்குப் புறம்பானவை.''

# புதிய உதவிப் பதிவாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு இரு புதிய உதவிப் பதிவாளர்களாக செல்வி இரஜனி நாகராசா, செல்வி இரத்தின சபாபதி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ச)

# மட்டு.நகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சப்படுகிறது. அதில் ஒருவர் சுந்தரராசா தம்பிராசா (22 வயது) என்பவராவார்.

### வீடுகள் தீக்கிரை

நாவற்குடா, புன்னைக்குடாப்பகுதிகளிலுள்ள சுமார் 35 தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஆரையம்பதி பூநொச்சிமுனை, நாவற்குடா சந்தைக் கட்டடங்களுக்கும் தீவைக்கப்பட்டதால் அவை முற்றாக எரிந்துவிட்டன.

### 3000 அகதிகள்

திலவம்புச்சம்பவத்தைத் தொடர்ந்து பதற்றமடைந்த சுமார் 3000 பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்

இத்தருணத்தைப் பயன்படுத்தி, குண்டர் கோஷ்டியினர் மக்கள் நடமாட்டமில்லாத வீடுகளிலுள்ள பொருட்களைக் கொள்ளை அடித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தொடர்ந்து துப்பாக்கிவெடிச் சத்தங்களும் குண்டுவெடிச்சத்தங்களும் கேட்டவண்ணமிருக்கின்றன.

கண்ணிவெடியில் பலியான மூவரின் சடலங்கள் கல்லடி முகாமில்வைத்துப் பிரேத பரிசோதனைசெய்தபின்னர் அவர்களின் சொந்த இடங்களுக்கு ஹெலிகொப்டர்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# 'அந்தத்' தமிழகம் நோக்கி .....

— தி. பொன்னம்பலவாணர்

தமிழகத்தை நமக்குத் தாய் நாடென்று குறிப்பிடுவது வழக்கம். மொழிக்கும் சமயத்துக்கும் தாய் நாடாக விளங்குவது மட்டுமல்ல நமது நிகழ்காலத்திலும் வருங்காலங்களிலும் நமக்கு உதாரண நாடாகவும், பலவிடயங்களில் நாம் பின்பற்ற வேண்டிய நாடாகவும் தமிழகம் விளங்குகின்றது. இது ஒரு வகையில் நமக்குப் பெருமையளிப்பதாக இருந்தாலும் இதுவரையில் சில விடயங்களில் நாம் மிகப் பின் தங்கிவிட்டோம் என்பது மிகச் சிறுபன்மையாகவே தெரிகின்றது.

மதுரை - திருச்சி, தஞ்சாவூர் நகரங்களில் குடியிருப்பு 'ப்ளாட்ஸ்'களும் புதிய தொழில் கட்டிடங்களும் அதிகரித்துள்ளன. என்று சொல்லல் போதாது! குவிந்து போய் விட்டன என்றே சொல்ல வேண்டும். ஆனால் கட்டிடங்கள் அதிகரிப்பது இப்போதும் தடைப்படவில்லை!

முன்பு தஞ்சாவூர் நகரில் எங்கு நின்றாலும் தஞ்சைப் பெரிய கோயில் நன்கு தெரியும். இதேபோல் மதுரையில் எங்கு நின்றாலும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் கோபுரங்கள் தெரியும். இப்போது தஞ்சையிலும் மதுரையிலும் எங்கு நின்றாலும் புதிய கட்டிடங்களே தெரிகின்றன.

திருச்சி, தஞ்சாவூர் சென்னை நகரங்களின் பரப்பளவைப் பெருக்கும் வகையில் செய்யப்படும் ஆபத்துக்களைப்பார்த்து யாழ்ப்பாணம் எப்போது தான வளர்ச்சியடையும் என்று கேட்கும் கேள்வி கேள்வியாகவே நிற்கிறது.

சில வருடங்களுக்கு முன்- தமிழ்நாட்டில் புளித் தட்டுப்பாடு ஏற்பட்டபோது ''வீதியோரங்களில் புளியங்கன்றுகளை நாட்டிவளர்க்க வேண்டும்'' என்று ராஜாஜி வானொலிமூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரின் வேண்டுகோள் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டதின் விளைவாக சாலையோரங்களில் நன்கு வளர்ந்து பயன் கொடுக்கும் புளியமரங்களைக் கண்டேன். புளியமரங்கள் மட்டுமன்றிப் பலவகைப்பட்டபயன் தரு மரங்களும் வீதியோரங்களில் காலந்தோறும் நாட்டப்பட்டு வளர்க்கப்படுகின்றன. விறகு வீடுகட்டுதல் முதலிய தேவைகளுக்காகப் பனை போன்ற நிரந்தர பயன்தரும் மரங்களை அழிக்காது மூங்கில், சவுக்கு, சீமைக்கருவேல் முதலியவற்றை வளர்க்கும் முறையை தமிழகத்திலிருந்து பின்பற்றுவது பெரிதும் பயனளிக்கும்.

இங்கு சில ஆலயங்களில் சீமைக்கருவேல மரத்தை வன்னிமரம் என்று வளர்க்கிறார்கள் என்ற உண்மையை இந்தியாவிலுள்ள சீமைக்கருவேலமரங்களைக் கண்டபோதே தெரிந்து கொண்டேன்.

[15]

சுறுசுறுப்பு - விடாமுயற்சி - துணிவு - இரக்கம் - மனிதாபிமானம் முதலிய பல பண்புகள் இங்கிருப்பதைவிட தமிழகத்தில் சிறப்பாக இருப்பதைக் கண்டேன்.

இப்படியான பண்புமிகுதியால்தான் ஈழத்தமிழர்களுக்காகப் பாடுபடுகிறார்கள். சிலர் தியாகஞ் செய்கிறார்கள். தமிழகத்திலுள்ள பண்பாளர்களைப் பற்றி இங்குபலர் அறியாமையால்தான் அங்குள்ளவர்கள் அரசியல் லாபத்துக்காக எமக்குக்குரல் கொடுப்பதாகத் தவறாக கருதுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் பார்க்க தமிழ் நாட்டில் கல்வியறிவு எழுத்தறிவு பெற்றவர்கள் குறைவு - இதற்காக அங்குள்ளவர்களைமுட்டாள்கள் என்று கருதக் கூடாது! தமிழக அரசு விவசாயம் - கருத்தடை முதலிய தொடர்பான விளம்பரங்கள், அறிவித்தல்களை தமிழகத்தின் எல்லாத் தரத்துக்கும் - அடிமட்டத்துக்கும் செல்லக்கூடியதாக -பயன் தரக்கூடியதாக விநியோகிக்கிறது.

இப்படி விநியோகிப்பது நன்மைபலனளிக்கவும் செய்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம், நாட்டுப்பற்றின் சிறப்பு என்பன நன்கு அறிவிக்கப்படுகின்றன.

பஸ்களில் பிரயாணம் செய்யும் போது திருக்குறளைப் படிக்கவும் பாடமாக்கவும் சிந்திக்கவும் தூண்டும்வகையில் பஸ்ஸுக்கொரு திருக்குறள் எழுதியிருப்பது அனுபவபூர்வமாகப் பலருக்கு பயன்படுவதைக்கண்டேன். நானும் பயனடைந்தேன்.

## மனிதாபிமானமே பிரதானம்!

## அரசியல் லாபத்துக்காக தமிழகம் எமக்கு குரல் கொடுக்கவில்லை!!

தமிழகத்திலுள்ள பெரும்பாலான ஆலயங்களை அரசாங்கமே நிர்வகிக்கின்றது. இந்து அறநிலையத்துறை அமைச்சு என்ற திணைக்களம் மூலம் தமிழக அரசு ஆலயங்களை நிர்வகிக்கின்றது. இந்து அறநிலையத்துறை அமைச்சராக இப்போது விளங்குபவர் மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்கள்.

இந்த அமைச்சின் நிர்வாகத்துக்குள் இன்றியும் சில ஆலயங்கள் உள்ளன. இவற்றை ஆதீனங்கள் சில நிர்வகிக்கின்றன.

தமிழக ஆலய நிர்வாக அமைப்பில் அதிகவருவாயுள்ள கோயில் வரும்படியை எடுத்து வருவாய்குறைந்த ஆலயத் தேவைகளை நிறைவு செய்யும் முறையைக் கையாளுகின்றார்கள். இந்தமுறையை நம்மிடையே உள்ள வருவாய் மிகுந்த ஆலயங்கள் பின்பற்ற வேண்டும்.

ஆலயங்களை நிர்வகிக்கும் ஆதீனங்களும் தாம் நிர்வகிக்கும் ஆலயங்களின் வரலாறு, சரித்திரம், தொடர்பான நூல்களையும் இன்றியமையாத சமய விளக்கங்களையும் நூல்கள் வாயிலாக வெளிப்படுத்துகின்றன. இவையெல்லாம் ஆலய நிர்வாகிகளின் கடமை என நம் ஆலய நிர்வாகத்துக்குத் தமிழக ஆலயங்கள் போதிப்பதாகக் கொள்ள வேண்டும்.

'ஆலயத்தில் நின்றவர்களை இராணுவம் கொலை செய்து விட்டதாமே. இப்படியும் யாராவது செய்வார்களா?'

'நீர் ஏன் தனியாக வந்தீர்? உம் தாய்தந்தையர்களை இங்கு அழைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை உடனடியாகமேற் கொள்ளும்';

'நீர் உமது குடும்பத்தில் உள்ளவர்களை அழைத்துக் கொள்ளும்; நான் என்னால் இயன்ற சகல உதவிகளையும் செய்வேன்'.

இதுபோன்ற வார்த்தைகளை இலங்கைத்தமிழன் என்று என்னை அறிந்ததும் மனிதாபிமானம் மேவிட இதயபூர்வமாகக் கூறியபல உள்ளங்களையே எனது தமிழகப் பயணத்தில் அடிக்கடி சந்திக்க முடிந்தது.

அந்த உயர்ந்த உள்ளங்களின் அன்புச்சுமை, நான் பெற்ற 'தமிழகஇன்பம்' ஆகியவற்றை எண்ணி எண்ணி அசைபோட்டவேளை கட்டுநாயக்கா வந்துவிட்டதை என்னை ஏற்றிவந்த இந்தியன் ஏயர்லைன்ஸ் விமானம் அறிவித்தது.

'நமஸ்தே' என்ற விமானப் பணிப்பெண்ணின் வணக்கத்துடன் பொதுவாக விமானப்படிகளில் கீழிறங்கினேன்.

—கடைசிப்படி...

— மறுகணம், அஞ்சநேயர் எரித்த 'இராவணன் பூமி'யில் மீண்டும் காலடிவைத்தேன்!

(முற்றும்)

[Ad Vt] ஈர்ப்புவலி, தொண்டைக் கரப்பான், கக்குவான் இருமல் காசநோய், சின்ன முத்து. இளம்பிள்ளைவாதம் ஆகிய நோய்களுக்குத் தடுப்பு மருந்துகள் அளிக்கப்படும் சிகிச்சை நிலையங்களும் அவை செயற்படும் காலநேரமும்

## சுகாதாரப் பிரிவு — யாழ்ப்பாண மாநகரசபை

| இடம் | சிகிச்சை அளிக்கப்படும் நிலையம் | சிகிச்சை வகை | நாள் | நேரம் |
|---|---|---|---|---|
| (1) நல்லூர் | கச்சேரி நல்லூர் வீதி [முத்திரைச் சந்தி அருகாமை] | கர்ப்பிணி நலன் குழந்தை நலன் குடும்ப நலன் | 1ம், 3-ம் திங்கள் | காலை 8—12 வரை |
| (2) பொம்மைவெளி | பிரசவ விடுதி | ,, | 1-ம், 3-ம் செவ்வாய் | ,, |
| (3 ஆனைப்பந்தி | நாவலர் வீதி [பருத்தித்துறை வீதிச் சந்தி] | ,, | 1-ம், 3-ம் வியாழன் | ,, |
| (4) மடத்தடி | யுபிலி பிரசவ விடுதி | ,, | 1-ம், 3-ம் வெள்ளி | ,, |
| [5] நெடுங்குளம் | நெடுங்குளம் பிரசவ விடுதி | ,, | 2-ம், 4-ம் திங்கள் | ,, |
| [6] வண்ணார்பண்ணை | நாச்சிமார் கோவிலடி (காங்கேசன்துறை வீதி) | ,, | 2-ம், 4-ம் புதன் | ,, |
| [7] கொட்டடி | முஸ்லிம் கல்லூரி வீதி, (ஆஸ்பத்திரி ரோட் சந்தி) | ,, | 2-ம், 4-ம் வியாழன் | ,, |
| (8) பாசையூர் | பிரசவ விடுதி பீச் ரோட், (கடற்கரை ரோட்) | ,, | 2-ம், 4-ம் வெள்ளி | ,, |
| (9) அரியாலை மேற்கு | காந்தி சனசமூக நிலையம் | ,, | 1-ம் புதன் | ,, |
| (10) அரியாலை கிழக்கு | பிரசவ விடுதி, கண்டி வீதி, (அரியாலை) | ,, | 3-ம் புதன் | ,, |
| (11) யாழ்ப்பாணம் | அரசினர் வைத்தியசாலை, (வெளி நோயாளர் பகுதி) | குழந்தை நலன் | தினமும் [ஞாயிறு தவிர] | |

## சுகாதாரப் பிரிவு — மானிப்பாய்

| இடம் | சிகிச்சை அளிக்கப்படும் நிலையம் | சிகிச்சை வகை | நாள் | நேரம் |
|---|---|---|---|---|
| (1) மானிப்பாய் | சுகாதாரக் கந்தோர், மானிப்பாய் | குழந்தை நலன் | 2-ம் 4-ம் சனி | காலை 8-12 வரை |
| (2) ,, | ,, | கர்ப்பிணி நலன் | 1ம், 3-ம் சனி | ,, 8-12 வரை |
| (3 ,, | மருந்தகம், பிரசவ விடுதி, மானிப்பாய் | ,, | 1-ம், 3-ம் செவ். | ,, 8-12 வரை |
| (4) பட்டினசபை மானிப்பாய் | பட்டினசபைக் கந்தோர் | குழந்தை நலன் | 1-ம், 3-ம் புதன் | மாலை 2 4 வரை |
| (5) கிராமசபை ஆனைக்கோட்டை | கிராமசபைக் கட்டிடம் | குழந்தை நலன் | 2-ம், 4-ம் புதன் | மாலை 2-4 வரை |
| (6) சுதுமலை | சுதுமலை சனசமூக நிலையம் | குழந்தை நலன் | 2-ம், 4-ம் புதன் | காலை 8 12 வரை |
| (7) நவாலி | கிறிஸ்தவ இளைஞர் பன்றக் கட்டிடம் (வை. எம். சி. ஏ.) | குழந்தை நலன் | 2-ம், 4-ம் செவ். | காலை 8-12 வரை |
| (8) மாசியப்பிட்டி | பிரத்தியேக வீடு | குழந்தை நலன் | 2-ம், 4-ம் வியா. | காலை 8-12 வரை |
| (9 பண்டத்தரிப்பு | வைத்தியசாலை, பண்டத்தரிப்பு | கர்ப்பிணி நலன் | எல்லாப் புதன் | காலை 8-12 வரை |
| (10) ,, | ,, | குழந்தை நலன் | 1-ம் 3-ம் செவ். | காலை 8-12 வரை |
| (11) ,, | பட்டினசபைக் கட்டிடம் | குழந்தை நலன் | 2ம், 4-ம் செவ். | காலை 8-12 வரை |
| (12) சங்கானை | வைத்தியசாலை, சங்கானை | குழந்தை நலன் | ஒவ்வொரு திங்கள் | காலை 8-12 வரை |
| (13) சங்கானை | வைத்தியசாலை, சங்கானை | கர்ப்பிணி நலன் | ஒவ்வொரு புதன் | காலை 8-12 வரை |
| (14) தொல்புரம் | மருந்தகம் | கர்ப்பிணி நலன் | ஒவ்வொரு சனி | ,, 8-12 வரை |
| (15) ,, | ,, | குழந்தை நலன் | ஒவ்வொரு செவ்வாய் | ,, 8-12 வரை |
| (16) வட்டுக்கோட்டை | வைத்தியசாலை | கர்ப்பிணி நலன் | ஒவ்வொரு செவ்வாய் | ,, 8-12 வரை |
| (17) ,, | ,, | குழந்தை நலன் | ஒவ்வொரு வியாழன் | ,, 8-12 வரை |
| (18) ,, | மருந்தகம் | குழந்தை நலன் | ஒவ்வொரு திங்கள் | ,, 8-12 வரை |
| (19) ,, | ,, | கர்ப்பிணி நலன் | ஒவ்வொரு புதன் | ,, 8-12 வரை |
| (20) இளவாலை | பிரத்தியேக வீடு | கர்ப்பிணி நலன் | 1-ம் 3-ம் திங்கள் | ,, 8-12 வரை |
| (21 ,, | ,, | குழந்தை நலன் | 2-ம். 4-ம் திங்கள் | ,, 8-12 வரை |


## ஓய்வு பெறும் ஹாட்லி அதிபர்

கடந்த பத்து வருடங்களாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக இருந்த திரு W. N. S. சமுவேல் அவர்கள் முப்பத்தியேழு 37) வருட கல்விச்சேவையின் பின் இம்மாதம் இளைப்பாறுகிறார். அவர் ஒரு திறமையான ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராயும், அநேக மாணவர்களின் வாழ்க்கையை சரிவர நெறிப்படுத்திய ஆசிரிய ஆலோசகராயும் இருந்தார். கல்லூரியின் பாரம்பரியங்களைக் கருத்தாய்க் காத்துவந்த அவர் தனது ஆசிரியர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவராய் பரீட்சைகளில் மிகவும்திறமையான பெறுபேறுகளை வருடாவருடம் பெற்றுத்தந்தார். அநேக மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பொறியியல், மருத்துவ, வர்த்தக பகுதிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது மன்றி, தீவி

(7ம் பக்கம் பார்க்க)

## இன்று பண்ணிசைக் கச்சேரி

[யாழ்ப்பாணம்]

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நாவலர் சபை ஆதரவில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு செல்வி பரிமளா தமசிவாயம் அவர்களின் பண்ணிசைக்கச்சேரி நடைபெறும். இதில் செல்வி பா. கண்ணும்பா வயலினும், செல்வன், வோ: சிவயோகராசா மிருதங்கமும், திரு. சி. த. நடராசா கெஞ்சிராவும் பக்கவாத்தியம் வாசிப்பர்.


### விசேட்டி மினி
10-30, 2-30, 4-45, 7-00
**TORSO**
பயங்கரம், திகில் கொலை வயதுவந்தவர்கள், மட்டும்

### உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
**The Soldier**
(Foll of Actiou)
திரைக்கு வராத புதிய சண்டைப்படம்,

### ராணி மினி
"டீ" திரைவானில்
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
**TanzaniaIsland**
தன்னை வளர்த்த பெண்ணிடமே அட்டூழியம் புரியும் ஒரு ராட்சத மனிதக் குரங்கின் கதை பார்க்கத் தவறாதீர்கள்.

### எம்பயர்
7 அடித் திரையில்
(வைத்தீஸ்வரா சந்தி)
தினசரி 10-30, 2-30, 6-30, இரவு 9-00
ரஜனிகாந் (3 வேடங்களில்) ராதிகா, சில்க் சிமிதா நடித்த
**'மூன்று முகம்'**
V. G. P. ஒறிஜினல் பிரதி


### சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-15, 4-30, 7-00
Harri son Foro .... in
**RAIDENS OF THE LOST ARK**
(மறைந்த பொக்கிசத்தை தேடுபவர்கள்)
பயங்கர சண்டைகள் நிறைந்த திகில் . . . மர்மம்

### வெலிங்டன்
10-30, 2-30, 6-30,
பாக்கியராஜ்- அம்பிகா நடித்த
**அந்த ஏழு நாட்கள்**

### லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
சிவகுமார் ஜெய், சந்திரன், சுமித்ரா ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர் நடித்த
ராஜ மகேந்திரனின்
**திங்கள் கேட்டவை**
சங்கிலி கனி


# இன்று நினைவுதினம்

## பி. எஸ். டாக்குத்தர்



இன்று வைத்தியத் துறையில் எத்தனையோ சத்திர சிகிச்சை நிபுணர்கள் இருக்கிறார்கள். சத்திர சிகிச்சையும் பல பிரிவுகளாக வளர்ந்துள்ளது. அன்று முழுவடமாகாணத்துக்கும் ஒரே ஒரு சத்திரசிகிச்சை நிபுணர் இருந்தகாலம் ஒன்று நிலவியது. 'புறவின்சல் சேர்ஜன்' என்பதன் ஆங்கிலப்பதவியின் (Provincial Surgeon) முதல் எழுத்துக்கள் P. S. என்பனவாகும். பி. எஸ். என்ற பெயராலேயே சுப்பிரமணியம் அவர்கள் வழங்கினார்கள். வைத்தியம் செய்தார்கள். தர்மப்பணியில் அக்காலத்தில் அவரே முதலில் நின்ற மூத்தவர். வைத்தியத்துக்குப் போகிறவர்களுக்குச் செலவுக்காசும் மருந்தும் கொடுத்ததை அவருடைய தருகை, நீண்டகை, தருமக்கை, நாடி பார்த்த நம்பிக்கை. நம்பிக்கை கொடுத்த நாகரிகக்கை

ஒருமுறை பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்குத் தாங்கமுடியாத நோய்வு பி. எஸ். வீட்டுக்குப் போனார் கிழவனார் கண்டார் ஊசிபோட்டார்; நோய் தணிந்து சுகமாயிற்று. பண்டிதமணி அவர்கள் வாய்முணுமுணுத்தது: அருச்சுனன் பெரிய அஸ்திரத்தைக் கையிலெடுத்ததும் எதிரிகள் ஓடினர். கிழவர் ஊசியை எடுத்தார் நோய் பறந்தது: பாசுபதம் கையிலெடுத்தார் கிழவர் காசம் பறந்ததே செய்வது சதெதென்பது தெரியாது:

மில்க்வைற் செய்தி

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 11 (27-9-85)
கிழமை: வெள்ளி
திதி: சதுர்த்தி
நட்சத்திரம்: சதயம்

மேடம்: குடும்பத்தில் சிறு பூசல்கள் தலைதூக்கும்; ஆத்திர உணர்ச்சியினால் மோதல்கள் தோன்றக்கூடும்; முன்னேற்றமும் தடைப்படும்; அமைதியுடனிருக்கவும்.

இடபம்: குளுமையான சம்பவங்கள் இடம்பெறும். தக்க சமயத்தில் தாயின் ஆதரவு கிடைக்கலாம். இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம்.

மிதுனம்: முயற்சியால் உயர்ச்சியுண்டு. விவசாயிகளுக்கு நன்மை பிறக்கும், குடும்ப மகிழ்ச்சியுமுண்டு; புத்திரர் உயர்ச்சியுமுண்டு.

கடகம்: ஆயுதபீடைக்கு இடமுண்டு. எதிலும் அவதானம் வேண்டும். அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கும். தெய்வ நம்பிக்கை நன்று.

சிங்கம்: களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். காதலர் வாழ்வில் கனகுஷியான தினம்; வாழ்க்கையும் உற்சாகம் நிரம்பியதாகவேயிருக்கும்.

கன்னி: பிரச்சினைகள் மேலும் சிக்கலாகும்.

துலாம்: புண்ணிய விருப்பு மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும்; பிதாவழி வரவிற்கு இடமுண்டு, தொழில் விருத்தியுமேற்படலாம்.

விருச்சிகம்: வித்தை தயில் வெற்றி காணும். வேண்டியது கிடைக்கும். இல்லத்திலும் இனிமை பிறக்கும். உறவினர் மத்தியிலும் செல்வாக்குப் பெருகும். சுபதினம்.

தனுசு: சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு. பெரியோர்கள் ஆதரவும் பெருகும். மகிழ்ச்சிகரமான தினம்.

மகரம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ள நேரிடும் எண்ணத்தின் தாக்குதல் நெஞ்சத்தைப் புண்ணாக்கும்; அற்ப விடயத்திற்கும் பொல்லாங்கு கேட்க நேரிடும்; நிதானம் அவசியம்.

கும்பம்: பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் அவதானத்துடன் பழகவும். இன்னலின் பின்னல் சோர்வைத்தரலாம். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளவும்.

மீனம்: கற்றதன் பயன் இன்று கிடைக்கும். நுட்பமான பேச்சுக்களில் இன்று ஈடுபடுவீர்கள். வெளியிடத் தொடர்பும் பெருகும். சுப நாள்.

திருமலை
வே ரவீந்திரன்

## ஓய்வுபெறும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலே அதிகம் கூடிய புள்ளிகளைப் பெற்றுமுள்ளனர். கல்லூரியின் சஞ்சிகையைத் தவறாது பிரசுரித்தது மல்லாமல் பலவகைகளில் பழைய மாணவர்களுக்கும் தற்போதைய மாணவர்களுக்கு மிடையில் ஒருநெருங்கிய உறவையும் உண்டாக்கினர். பழையமாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையை உயிர்ப்பித்து வருடாவருடம் கூடச் செய்து அதன் உதவியுடன் பல காரியங்களைக் கல்லூரியில் செய்து வந்தார். அகில இலங்கை மெதடிஸ் திருச்சபையின் உப தலைவராகத் தெரியப்பட்டிருந்த அவர். அதன் பிரதிநிதியாக லண்டன் சென்றிருந்தபோது ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக்கிளையொன்றை அங்கு ஸ்தாபனம் செய்துவைத்தார். கல்லூரியில் அவர் கட்டுவித்த இரு பெரும் கட்டிடங்களுள் ஒன்று நாலு விஞ்ஞான பாடங்களையும் கற்பிக்கக் கூடிய ஓர் பாரிய ஆய்வுகூடம். அதற்குரிய தளபாடங்கள், உபகரணங்களையாவற்றையும் மிகச்சிரமத்துடன் தேடியிருந்தார். வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் பேச்சாளராகப் பல தடவைகளில் அவர் கடமையாற்றியுள்ளார். பருத்தித்துறை Lions Clanb-அரிமாசங்கத்தின் செயலாளராக இருந்து பல வருடங்களாகப் பல அரிய செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருந்தார்.

உப அதிபரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய திரு பீ. பாலசிங்கம் அவருடைய இடத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பழையமாணவர்

# பஸ் ஊழியர் வேலைக்குத் திரும்பினர்

[அக்கரைப்பற்று]

அக்கரைபற்று டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதி கடத்தப்பட்டது குறித்து, அந்த டிப்போ ஊழியர்கள் நேற்று முன்தினம் காலை 8 மணி தொடக்கம் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தனர் அதேசமயம் மட்டக்களப்பு, கல்முனை டிப்போ ஊழியர்களும் கடந்த இரு நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் பொத்துவில் 1 வது எம். பி. ஜனாப் உதுமாலெப்பை, மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப் மக்பூல் ஆகியோர் மேற்கொண்ட சமரச மகாநாட்டைத்தொடர்ந்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டதுடன் இரு டிப்போ ஊழியர்களும் வேலைக்குத் திரும்பி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை அக்கரைப்பற்று டிப்பாவைச் சேர்ந்த பஸ் ஒன்று சில பிரயாணிகளுடன் காரைதீவு, மாளிகைக்காடு என்னுமிடத்தில் கடத்திச் செல்லப்பட்டது. அத்துடன் சாரதியும் ஒருவரும் கடத்தப்பட்டார். பின்னர் பஸ்சாரதியான காரைதீவைச் சேர்ந்த காத்தாம் பிள்ளை என்பவரைத்தவிர மற்றவர்கள்விடுவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

ஒரு சமூகத்தைச்சேர்ந்த இருவர் கடத்தப்பட்டதற்கு பதில் நடவடிக்கை யாகவே பஸ் சாரதியைத் தாங்கள் வைத்திருப்பதாக உரிமை கோரி 'ஜிஹாத் படை' பிரசுரம் வெளியிட்டுள்ளது.

[மா]


108, BROWN ROAD,
**A/L 86**
**இரசாயனம்**
ஆசிரியர்: சத்திஸ்
ஆரம்பம்: 28-09-85
சனி, ஞாயிறு
2-15, 4-15 p. m.
(930)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் நம்பிராஜா வசீகரன்

பண்டத்தரிப்பு பிரபல வர்த்தகர் கு: நம்பிராஜா சாந்தா தம்பதிகளின் செல்வப்புதல்வன் வசீகரன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (27-9-85) வெள்ளிக்கிழமை "ராஜாரூஸ்" இல்லத்தில் மிகவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை சகல செல்வங்களும் பெற்று வாழ்கவென அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்கா, அன்ரி, மாமிமார், சித்தப்பாமார் மற்றும் உறவினர்களும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

937

## இன்று

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்பரிசளிப்பு விழாவில் மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு இ. கே. கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். திருமதி: கந்தசாமி மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவார். [ச]

## உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு வாழ் பொது மக்கள் வெலிக்கடைச்சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு சந்தை மைதானத்தில் மாபெரும் உண்ணாவிரதமொன்றை நடாத்தவுள்ளனர்.

காலை 7 மணி முதல் மாலை மணிவரை நடைபெறவிருக்கும் இவ்வுண்ணாவிரதத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## வீதி உலா

(யாழ்ப்பாணம்)

வண்ணை வெங்கடேசர் ஆலய விடாயாத்தி யோகநாராயணர் திருவிழாவாகிய இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சுவாமி இலந்தை விருட்சம் அமைந்த பூந்தொட்டியில் எழுந்தருளி அடியார்களுக் அருள் பாலிப்பதோடு வீதி உலா வருதலும் இடம் பெறும். (ச)


## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு தகைமைவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Clerk cum English Typist
2. Librarian

முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும்:
விண்ணப்ப முடிவு திகதி: 5-10-85

செயலாளர்,
ஊற்று நிறுவகம்,
மாரிஅம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (942)

சுண்டுக்குளி கிளை நூலகம்



ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## இன்று ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயில் இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. நாளை சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று உற்சவம் நிறைவுறும். [ச]

# புற்று நோயாளருக்கு விடுதி அமைக்க முடிவு

## நன்கொடைகள் தேவை

(யாழ்ப்பாணம்)

குணப்படுத்த முடியாத புற்றுநோயாளர் இறுதிக்காலத்தில் தம் வாழ்வை அமைதியாகக் கழிக்கும் விதத்தில் உதவுவதற்கு புற்றுநோயாளர் விடுதி ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென வடமகாண புற்றுநோய் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த முயற்சிக்கு பொது மக்களிடமிருந்தும், தனவந்தர்களிடமிருந்தும் நிலம், கட்டிடம் போன்றவற்றை நன்கொடையாக அல்லது நீண்டகால வாடகைக்குப் பெறுவதென்றும், இவைதவிர பொது மக்களிடமிருந்து நிதி திரட்டவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு கதிர் சிகிச்சை அளிக்கும் நிபுணர் நியமிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

புற்று நோயாளர்கள் பலர் மஹரகமவுக்கு சிகிச்சைக்காக செல்ல முடியாதிருக்கும் அவலநிலை பற்றி பல உறுப்பினர்கள் கூட்டத்தில் கவலை தெரிவித்தார்கள்.

சங்கம் மேற்கொள்ள விருக்கும் மேற்படி புதிய பணிகளுக்கு உதவ விரும்புவோர் திரு இ சிவாநந்தினம் (அறிக்காரி) வழக்கறிஞர் 33, 4-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி சங்கத்தின் செயலாளர் திரு க அருளம்பலம் கேட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் ஒன்றுதான் பாதுகாப்பான இடம்

"யாழ்ப்பாணம் ஒன்றுதான் பாதுகாப்பான இடம்: அதனால்தான் உடமைகளை பறிகொடுத்து, உயிர் ஊசலாடும் நிலையில் அடிபட்டு, வதைபட்டு, அல்லல்பட்டு அகதிகளாக வந்துள்ளோம்''.

இரு தலைமுறைக்கு மேல் திருமலையில் வாழ்ந்த அக் குடும்பத்தினர் இப்படிக் கூறினார்கள்.

சிறப்புச்சிறப்புமாகச் செல்வாக்குடனும் வாழ்ந்த அக்குடும்பத்தினர் அங்கு யாரும் கதியின்றி வடக்கு நோக்கி வந்துள்ளார்கள்.

83 ஜூலை கலவரத்தில் நிலைகுலையாதவர்கள்; தாக்குதலுக்கெல்லாம் தாக்குப்பிடித்தவர்கள், இன்று சொந்த மண்ணைவிட்டு புறப்பட்டுவரும் நிலை ஏற்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக, பல்நெடுங்காலமாக, பிறந்து, தவழ்ந்த மண்ணைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுவிட்டது

ஆயிரக்கணக்கான அகதிகள் திருமலையைவிட்டு வெளியேறி வள்ளங்கள் மூலம் முல்லைத்தீவு வந்து, அங்கிருந்து வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஊர்காவற்றுறையில் ஒரு முகாம். அங்கு நூற்றுக்கணக்கான அகதிகள் பருத்தித்துறையில் ஒரு முகாம். அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் இதைவிட உறவினர்கள், நண்பர்கள் வீட்டிலும் பலர் தங்கியுள்ளார்கள்.

நவாலியில் ஒரு பாழடைந்த வீடு. உரிமையாளர் வெளிநாட்டில், அங்கு திருமலையிலிருந்து வந்த 4 குடும்பங்கள் மொத்தம் 28 பேர். அவர்களைச் சந்தித்தபோது எதிர்காலம் உண்டா? என்று ஏங்கித் தவித்த நிலையில் இருந்தார்கள். உதவி அரசாங்க அதிபரின் ஊடாக சில உணவுப் பொருட்கள் கிடைக்கின்றது.

படுத்த பாயைச் சுருட்டிக்கொண்டு உடுத்த உடையுடன் புறப்பட்ட அகதிகளுக்கு அடுத்த நாள் மாற்றியுடுக்கத் துணியில்லை. வசதி படைத்தவர்கள் உதவிக்கு வரவேண்டும்; அகதிகளுக்கு வாழ்வழிக்கவேண்டும்.

உப்புவெளியைச் சேர்ந்தவர் திருமதி இ. சுலோசனாதேவி (வயது 27) இவருக்கு இரு குழந்தைகள்; நவாலியில் தங்கியிருக்கிறார். அவரை சந்தித்தபோது அந்தப் பயங்கரங்களைத் தெரிவித்தார்.

என்ன நடந்தது? என்று கேட்டேன்.

''கடந்த மாதம் 25-ம் திகதி இரவு 10 மணிக்கு இனந்தெரியாத சிலர் பயங்கர ஆயுதங்களுடன் அத்துமீறி வீட்டுக்குள் புகுந்து கொல்லப்போவதாகப் பயமுறுத்தினார்கள். வீட்டிலிருந்த பொருட்களைக் கொள்ளையடித்ததுடன் வீட்டையும் உடைத்து சேதப்படுத்தினார்கள்.

பயத்தினாலும், உயிரைக் காப்பாற்றவும், உடுத்த உடையுடன் புறப்பட்டு, நிலாவெளியில் நண்பர் ஒருவர் வீட்டில் தங்கினோம். ஒரு லட்சம் பெறுமதியான வீடு முற்றாகச் சேதமடைந்துவிட்டது 25,000 ரூபா பெறுமதியான தளபாடங்களும், 5,000 ரூபா பெறுமதியான துணிகளும் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன''-இப்படிக் கூறினார் சுலோசனாதேவி

''இனி அங்கு போய் முன்னர்போல வாழமுடியுமா?''

'முடியாதுங்க. இன்றுள்ள நிலையில் அந்த எண்ணமே இல்லை அங்கு போய் இருக்க விடில்லை.''

இந்தச் சம்பவங்கள் எப்படி ஆரம்பமானது?'

'கடந்த மாதம் 19-ம் திகதி எங்கள் பகுதிக்கு பக்கத்தில் உள்ள துவரக்காடு என்ற இடத்தில், இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார் பின்னர் பன்குளத்திற்குபக்கத்திலுள்ள நாமலைவத்தையில் தாக்குதல் நடந்தது. அதிலே சிலர் இறந்து போனாங்க. அதைத்தொடர்ந்து ஊர்காவல் படையினர் வந்து அங்குமிங்குமாகச் சுட்டதால் மக்கள் பயந்து வெளியேறினார்கள். ஊர்காவல் படையினர் சென்றபின் நாங்கள் போய்ப் பார்த்தோம். ஆறு ஏழு மாடுகள் சுடுபட்டு இறந்துகிடந்தன'.

'அப்பகுதியில் எல்லோரும் வெளியேறினார்களா?'

'பயத்தினால் பல குடும்பங்கள் வெளியேறின, நாங்கள் புறப்பட்டு பாதுகாப்பு தேடி பட்டிகளைப்புக்கு போனோம், அங்கு ஏறூரில் தாக்குதல் நடந்தது எங்கும் பாதுகாப்பு இல்லை என்று கருதி கொழும்பிற்குச் சென்றோம். அங்கும் இருக்கமுடியவில்லை. அதனால் யாழ்ப்பாணம்தான் பாதுகாப்பான ஓரிடம் எனக்கருதி இங்கு வந்தோம்.

என்னுடன் நவாலி பிரஜைகள் குழு செயலாளர் திரு ஜே. இன்னத்தரையும் வந்திருந்தார். இவர்தான் நவாலிக்கு வரும் அகதிகளுக்கு தேவையான உதவிகளை உடனுக்குடன் அப்பகுதிமக்களின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றார்.

[தொடரும்]

## வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

- கா. யோகநாதன் -

## ஈழ தே. வி. மு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் பிரதான மாநாடு: போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளை இணை அரசியல் கைதிகளின் நிலைமையை அறிய 'சர்வதேச மன்னிப்புச் சபை' போன்ற நிறுவனங்களை அனுமதி. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்புப்போன்ற வெறிச்செயல்களை நிறுத்து. 'மொசாட்', 'எஸ். ஏ. எஸ்.' கூலிப் படைகளை வெளியேற்று

கிளிநொச்சித் தாக்குதல் 'தமிழீழ இராணுவம்' உரிமை கோருகிறது. எதிரி தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் என்றும் எமது தரப்பில் உயிர்ச்சேதம் இல்லை என்றும், அரசின் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் கூறுகிறது.

மட்டக்களப்பு கல்லடியில் கண்ணிவெடி இன்ஸ்பெக்டர் 2, உதவியாளர் 1, பலி.

கடத்தப்பட்ட சந்ததியாருக்கு என்ன நடந்தது?

## பஞ்சாப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சாப் தேர்தலில் அகாலிதள் கட்சி முன்னணியில் நிற்பதனைத் தொடர்ந்து சட்டசபையில் அக்கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவது நிச்சயமாகிவிட்டது

இதன் காரணமாக தமது சட்டசபைத் தலைவரை தெரிவு செய்வதற்காக தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் கூட்டமொன்றை அகாலிதள் கட்சியின் பதில் தலைவர் திரு சுஜித் சிங் பர்னாலா இன்று கூட்டுகிறார்.

## 3 மக்கள் வங்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீளளிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது

நகைகள் மீளளிப்பது சம்பந்தமாக மேல்நடவடிக்கை எடுக்கும்முகமாக இன்று மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு மு கணேசசுந்தரமும், வங்கி தலைமைப் பாதுகாப்பு அதிகாரி திரு ஆறுமுகமும் கொழும்பு சென்றுள்ளனர். ஏற்கனவே முன்னாள் முகாமையாளர் திரு எஸ். சரவணபவானந்தன் கொழும்பில் தங்கியிருந்து அடகு வைத்தோருக்கு நகைகள் வழங்குவது சம்பந்தமாக மக்கள் வங்கி உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவது தெரிந்ததே.

ஏற்கனவே மூன்று சிறிய மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகள் மீளளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [மா]

# வவனியா மக்களுக்கு இப்படியொரு சந்தேகம்!

(வவனியா)

வவனியா விமானத்தளம் சர்வதேசவிமான நிலையத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் வவனியாப்பகுதி மக்களுக்கு எழுந்துள்ளது!

ஏன் தெரியுமா? அந்தளவுக்கு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை விமானங்கள் வந்து போகின்றன.

புதுப்புது விமானங்கள் வருகின்றன: போகின்றன இதனை அவதானிக்கும் போது; வவனியா விமானத்தளம் சர்வதேச விமானநிலையமாகிவிட்டதா என்றே எண்ணத் தோன்றுகிறது.

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் தர்மலிங்கம்

அளவெட்டியைச் சேர்ந்த முன்னைய கம்பொல ஓவசியர் (Retd. Overseer, Gampola) திரு. நமசிவாயம் தர்மலிங்கம் 24-9-1985 செவ்வாய்க்கிழமை காலமானார் இவர் தனலட்சுமியின் அன்புக்கணவரும், தர்மராஜ். ஸ்ரீதரன். தனபாலன். நவராஜ். சிவராஜ் தவராஜ். தர்மினி லோகராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸரீனா, மிதுலலட்சுமி, அகிலேஸ்வரி, உமா, வசந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரீனா, யூலியானா, மாலி, கிருஷ்ணா ஆகியோரின் பேரனுமாவார் ஈமக்கிரியைகள் அளவெட்டி அருணரின் இல்லமாகிய 'லட்சுமி வாசத்தில்' 28-9-1985 சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும் (944)

## மரண அறிவித்தல்

### யமுனாதேவி சிவப்பிரகாசம்

திரு திருமதி சிவப்பிரகாசம் தம்பதிகளின் செல்வமகள் செல்வி யமுனாதேவி சிவப்பிரகாசம் 26-9-85ல் காலமானார் இவர் சச்சிதானந்தன், ஸ்ரீதேவி, கணேசராசா, புஸ்பதேவி நமநாதன் நித்தியானந்தன், சிவானந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் திரு கணேசராசா, திரு. நமநாதன், திருமதி சசிகலா சச்சிதானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன், ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

இவரது ஈமக்கிரியை 26-9-85ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் 243, இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி இல்லத்தில் நடந்தேறி, கண்ணடிப்பிட்டி மயானத்தில் தகனம்செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. நித்தியானந்தன்,

(947)

## யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம்

18-9-85 புதன் இரவு 7 மணி 30 நிமிடம் வீடியோ பிரசாந் நிர்வாகி சேனாதிராசா இராமநாதன் அவர்கள் அவரது மைத்துனர் வீட்டில் இருந்து துப்பாக்கி ஏந்தியவர்களால் கொண்டுசெல்லப்பட்டார் இன்றுடன் ஒன்பது நாட்கள் ஆகிவிட்டதை உணர்ந்து வர்த்தக சங்கச்செயற்குழுவினர் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

26-9-85ல் கூடிய செயற்குழு எடுத்துள்ள முடிவின்படி வர்த்தகர்களுக்கு மேலும் இப்படியான நிலைமை ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். வர்த்தக சங்கத்தின் இப்படியான கோரிக்கைக்கு சம்பந்தப்பட்டவர்கள் செவிசாய்த்து அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். கொண்டுசெல்லப்பட்டவரின் மனநிலையையும், அவரது மனைவி பிள்ளைகளின் நிலைமையையும் உணர்ந்து உடனடியாக விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்வதோடு, விடுதலை செய்யாதபட்சத்தில் மாற்று நடவடிக்கையில் இறங்கவேண்டிய நிலை சங்கத்திற்கு ஏற்படும் இந்த நிலைமையை உருவாக்காமல் சம்பந்தப்பட்டவர்கள் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு மீண்டும் வர்த்தகர் சங்கத்தின் சார்பாக வேண்டிக்கொள்கிறோம்.

வர்த்தகர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
26-9-85

யாழ் வர்த்தக சங்க
செயற்குழு

(946)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 8412o